# WORD OF CHRIST

## கிறிஸ்துவின் வசனம்

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல
ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3 : 16

மரம் 6. ஜனவரி 1998. கனி 6.

ஆசிரியர்

B. அர்ஜுணன்

# ஆசிரியர் கடிதம்

வாசகர்களுக்கு,

நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையையும், சமாதானமும் உண்டாவதாக!

உங்கள் யாவருக்கும் என்னுடைய புத்தாண்டு வாழ்த்துக்கள். இம்மட்டும் தொடர்ந்து இவ்விதழை வெளியிட உதவிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக! இவ்விதழுக்காக ஜெபித்த, உதவிய ஒவ்வொருவரையும் கர்த்தர் தாமே ஆசீர்வதிப்பாராக!

சத்தியத்தை திரித்துக் கூறும் இக்கடைசி நாட்களில் கிறிஸ்துவின் வசனத்தைக் கூட்டாமலும், குறைக்காமலும் அப்படியே வெளியிடுவதே எங்கள் பணியாகும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ''இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டு வர வேண்டும், அவைகள் என் சத்தத்துக்கு செவி கொடுக்கும், அப்பொழுது ஒரே மந்தையும், ஒரே மேய்ப்பனுமாகும்'' என்றார் (யோவா 10 : 16).

வேதாகமத்தில் சொல்லப்பட்ட ஒரே மந்தை கிறிஸ்துவின் சபையே (ரோம 16 : 16), ஒரே மேய்ப்பர் கிறிஸ்துவே (எபே 5 : 23) சிந்திப்போம்! செயல்படுவோம்! சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்.

வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்.

இடம் : வத்தலக்குண்டு

தேதி : 6 - 1 - 98.

B. Ajin

ஆசிரியர்.

ஆசிரியர் குறிப்பு:

கடந்த இதழ் அட்டையின் உள் பக்கத்தில் ஒரு திருத்தம். ''நன்றி சொல்லி'' என முடிந்த வாக்கியங்களில் ''ஜெபிப்போம்'' என்ற வார்த்தை விடுபட்டிருந்தது. வாசகர்கள் அதை சரிசெய்து கொள்ளவும். சுட்டிக்காட்டிய சகோ. A. மைக்கேல்ராஜ்குமார் அவர்களுக்கு என் நன்றிகள்.

Published by,

**WORLD LITERATURE PUBLICATIONS**

Post Box 5,

BATLAGUNDU - 624 202.

INDIA.

# கிறிஸ்துவின் வசனம்

*WORD OF CHRIST*

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் 6 ஜனவரி 1998 கனி 6


ஆசிரியவுரை

## பரிசுத்தம் - Holiness

பரிசுத்தத்தைக் குறித்து பரிசுத்த வேதாகமமே தெளிவாக போதிக்கிறது. ''உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே'' 1 பேது 1 : 15-16. இப்புது வருடத்தில் அடியெடுத்து வைக்கிற நாம் நம் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தமுள்ளவர்களாக ஜீவிக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. ஒருவேளை இப்படி நினைக்கலாம், நான் நேற்றுவரை துன்மார்க்கமாக, அசுத்தமாக ஜீவித்தேனே. இனி இருக்கப்போகிற இந்த கொஞ்ச நாட்களையும் அதே விதமாகவே கழிக்கலாமென்று துணியலாம். பிரிய நண்பரே, அப்படி ஒன்றும் செய்து விடாதீர்கள். தேவன் தன் பிள்ளை இந்த வருடமாவது பரிசுத்தமாகமாட்டானா என்று காத்து நிற்கிறார். ஆகவே கடந்த வாழ்வை எண்ணி மனந்திரும்பி இப்புதிய வருடத்திலாவது குணப்படுங்கள்.

''நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயுமிருக்கிறீர்கள்'' 1 பேது 2 : 9. தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல, பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார். ஆகையால் தேவன் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் பரிசுத்தமான இரத்தத்தைக் கொண்டு நம்மை பாவமற கழுவி அவரது குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தி, பரிசுத்த ஜாதியாக மாற்றி அமைத்திருக்கிறார். இப்படி அவருக்குச் சொந்தமான நாம் நம்மை அசுத்தப்படுத்திக் கொண்டு அவலட்சணமான வாழ்க்கை வாழலாமா? ஒரு மனைவியானவள் 80% மட்டும் தன் குடும்பத் தலைவனுக்குக் கீழ்படிந்து 20% வேறுவிதமாக வாழ்ந்தால் அந்தக்குடும்பத் தலைவன் அவளை ஏற்றுக்கொள்வானா? அப்படியிருக்க நீங்கள் அவருக்குச் சொந்தமான ஜனமாயிருக்கிறீர்கள் என்பதை மறந்துவிடாதீர்கள்.

கிறிஸ்தவர்கள் என்றாலே, கிறிஸ்துவை உடையவர்கள் அல்லது அவரைத் தரித்துக் கொண்டவர்கள் என்று பொருள்படுகிறது. இப்படிப் பட்டவர்களை கிறிஸ்து தம்மோடு நித்திய நித்திய காலமாக வைத்துக்கொள்ள அழைக்க வந்தார். ஆகையால்தான் எபிரெய ஆசிரியர் எழுதும் போது, ''பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே, நாம் அறிக்கை பண்ணுகிற அப்போஸ்தலரும், பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப் பாருங்கள்'' (எபி. 3 : 1) என்கிறார்.

நாம் அநித்தியமான பாவ சந்தோஷங்களை அநுபவிப்பதைத் தெரிந்துகொள்ளாமல் பரலோகத்திற்கு அழைக்கப்பட்டவர்கள் என்பதை மனதிற்கொண்டு பரிசுத்தத்தின் மேல் பரிசுத்தமடைய முற்படுங்கள். வானமும் பூமியும் அக்கினிக்கிரையாக வைக்கப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய வருகையின் போது பூமியும், அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்து போம் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். ''இப்படி இவைகளெல்லாம் அழிந்துபோகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவ பக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்!'' II பேது 3 : 11. நம்மை நாமே சீர்தூக்கிப் பார்க்க வேண்டியது அவசியமாயிருக்கிறது.

''பிரியமானவர்களே! இவைகள் வரக்காத்திருக்கிற நீங்கள் கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள்'' II பேது 3 : 14. ஆகையால் நம்முடைய ஜீவியத்தை கறையில்லாமலும், பிழையில்லாமலும் காத்துக்கொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது. மேலும் பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே'' எபி 12 : 14ல் வாசிக்கின்றோம். தேவன் பரிசுத்தத்தை விரும்புகிறார். பாலை பாலோடுதான் சேர்க்க வேண்டும். பாலில் சிறிது உப்பு பட்டால் அது கெட்டுப் போய் விடுகிறது. அதுபோல நம்முடைய வாழ்க்கை பரிசுத்தமாக இருந்தால் பரிசுத்தமுள்ள கர்த்தரோடு சேர்க்கப்படுவோம். இல்லையேல் பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்ட நித்திய அக்கினியில் பங்கடைவோம்.

''மேலும், கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய் தகப்பன்மார்களுக்குக் கீழ்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும், சுபாவ அன்பில்லாதவர்களாயும் இணங்கா தவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரை பகைக்கிறவர்களாயும், துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப்பிரியராயிராமல், சுகப்போகப் பிரியராயும், தேவப்பக்தியின் வேஷத்தை தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்; இப்படிப்பட்டவர்களை நீ விட்டு விலகு'' II தீமோத் 3 : 1-5. இதில் பத்தொன்பது வகையான மனுஷ சுபாவங்களைப் பார்க்கிறோம். அதில் ஒன்று பரிசுத்தமில்லாமை. இப்படிப்பட்ட மனுஷர்களோடு நாம் ஐக்கியம் கொள்ளாமல் பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களோடு சேர்ந்து ஐக்கியங்கொண்டு பரிசுத்தத்தை காத்துக்கொள்வோம்.

''நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது பரிசுத்தவான்கள் அனைவரோடுங்கூட வரும்போது, நீங்கள் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாகப் பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கும்படி உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துவாராக'' 1 தெச 3 : 13 ஆமென்.

பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும். வெளி. 22 : 11

# கிறிஸ்துவின் நாமம்
# Name of Christ

**J. C. Choate**

புதிய ஏற்பாட்டைப் படிக்கும் போது அதிலே கிறிஸ்துவின் நாமம் பலமுறைக் குறிப்பிடப்பட்டிருப்பதைக் கண்டு ஒருவர் வியப்படையக் கூடும். பெயர் ஒன்றும் முக்கியமல்ல என்றும் அல்லது பெயரில் ஒன்றுமில்லை என்றும் மனிதன் எப்போதுமே தாக்கம்பண்ணுகிறான். சில பெயர்களை பொறுத்தவரை இது உண்மையாக இருக்கலாம்; ஆனால் கர்த்தருடைய நாமத்தைப் பொறுத்தமட்டில் நிச்சயமாக அப்படியில்லை.

1. தேவனுடைய மக்கள் ஒரு புது பெயரால் அழைக்கப்பட வேண்டியதாயிற்று (ஏசா 62 : 2). புதிய ஏற்பாட்டைத் திருப்பினால், சபை கிறிஸ்துவின் நாமத்தைத் தரிக்கவும் (ரோம 16 : 16, 1 கொரி 12:13 ), அதின் தனிப்பட்ட உறுப்பினர்கள் கிறிஸ்தவர்கள் என்று அறியப்படவும் வேண்டியதாயிற்று (அப் 11 : 26) என்பதை அறிகிறோம். இதுவே அந்த புதுப் பெயராகும்.

2. குடும்பப் பெயர் கிறிஸ்துவின் பெயராக இருக்கிறது. "இதினிமித்தம் நான் பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழு குடும்பத்துக்கும் நாமகாரணராகிய நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால் படியிட்டு...'' என்பதாக பவுல் எபே 3 : 14-15 வசனங்களில் கூறுகிறார்.

3. சபை, கிறிஸ்துவின் மணவாட்டி எனச் சொல்லப்படுகிறது. மணவாட்டி அவருடைய நாமத்தை அணிந்திருக்கிறாள் (வெளி. 21 : 9, 22 : 17). கிறிஸ்துவுக்கு ஒரே மணவாட்டிதான் உண்டு. அவர் மீண்டும் வரும்போது, அவருடைய பெயரைத் தரித்துள்ள அந்த மணவாட்டியை தம்மோடு சேர்த்துக்கொள்வார்.

4. எல்லா நாமங்களுக்கும் மேலானதாக அவருடைய நாமம் உள்ளது. ''ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்கு தந்தருளினார்" பிலி 2 : 9-11.

5. கிறிஸ்துவின் நாமத்தில் இரட்சிப்புண்டு. "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பில்லை, நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனிதர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவுமில்லை' அப் 4 : 12.

6. கிறிஸ்துவின் நாமத்தில் விசுவாசமுள்ளவர்களாக இருக்கவேண்டும். ''உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும், தேவ குமாரனுடைய நாமத்தின் மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும், தேவ குமாரனுடைய நாமத்தின் மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன்" 1 யோ. 5 : 13.

7. கிறிஸ்துவின் நாமத்தை அறிக்கையிட வேண்டும். "...கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லுகிற எவனும் அநியாயத்தை விட்டு விலகக் கடவன்..." II திமோ. 2 : 19.

8. மனந்திரும்பி கிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெறவேண்டும். "பேதுரு அவர்களை நோக்கி; நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்." (அப். 2 : 38) என்று சொன்னான்.

9. கர்த்தரின் நாமத்தில் ஆராதனை கூடி வரவேண்டும். கிறிஸ்து கூறினார்; ''ஏனெனில் இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்" (மத். 18 : 20)
குறிப்பு: கிறிஸ்துவின் பெயரை நீ அணிந்துகொள்ளாதிருந்தால், எப்படி கிறிஸ்துவின் பெயரால் கூடி வர இயலும்.

10. எல்லாவற்றையும் கர்த்தரின் நாமத்தில் செய்ய வேண்டும். "வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லலாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து அவர் முன்னிலையாக பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்'' கொலோ. 3 : 17.

11. கிறிஸ்துவின் நாமத்தால் நீதிமான்கள் வெறுக்கப்படுவர். ''என் நாமத்தினிமித்தம் நீங்கள் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள், முடிவு பரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான்'' மத். 10 : 22.

12. கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபம் செய்ய வேண்டும். ''நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப் படும்படியாக, அதைச் செய்வேன்" யோவா. 14 : 13.

13. கிறிஸ்துவின் நாமத்தின் வழியாக பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. ''பிள்ளைகளே அவருடைய நாமத்தினிமித்தம் உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படுகிறதனால் உங்களுக்கு எழுதுகிறேன்" 1 யோவா. 2 : 12.

14. கிறிஸ்துவின் நாமத்தை நிந்திக்கலாகாது. "உங்களுக்குத் தரிக்கப்பட்ட நல்ல நாமத்தை அவர்கள் அல்லவோ தூஷிக்கிறார்கள்?" யாக். 2 : 7.

15. கிறிஸ்துவின் நாமத்தில் பிரயாசப்பட வேண்டும். ''நீ சகித்துக் கொண்டிருக்கிறதையும், பொறுமையாயிருக்கிறதையும் என் நாமத்தினிமித்தம் இளைப்படையாமல் பிரயாசப்பட்டதையும் அறிந்திருக்கிறேன்" வெளி. 2 : 3.

16. கிறிஸ்துவின் நாமத்தின் மூலமாக நித்திய ஜீவன் கிடைக்கிறது "இயேசு தேவனுடைய குமாரன் என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும் படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது" யோ. 20 : 30-31.

கிறிஸ்துவின் நாமம் எவ்வளவு முக்கியம் என்பதை நிச்சயமாக இப்பொழுது நீ அறிந்திருப்பாய். அப்படி இது உண்மையாக இருக்கும் போது கர்த்தரின் நாமத்தை நானும் நீயும் தனித்தனியாகவும், சபையின் அங்கத்தினர்களாகவும், தரித்துக்கொள்ள வேண்டியது எவ்வளவு முக்கியம் என நீயும் கூட அறிந்துகொள்ளலாம். நான் கிறிஸ்துவின் சபையில் ஒரு அங்கத்தினராக இருப்பதால், நான் ஒரு கிறிஸ்தவன். உன் நிலை என்ன? வேதாகமத்தில் நீ வாசிக்கக்கூடிய சபையில் நீ ஒரு அங்கத்தினரா? நீ ஒரு கிறிஸ்தவனா? இல்லையேல், இன்றே கிறிஸ்தவனாகு.

Translated by S. S. Rajan.

## உங்கள் தீர்மானம் என்ன?
## What is your Decision?

இப்புதுவருடத்தில்

நான் தேவனுடைய கிருபையை விருதாவாக்குகிறதில்லை - கலா. 2:21

நான் அடைந்தாயிற்று அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல் - பிலி. 3 : 12

நான் என் சுயப்பிரயோஜனத்தைத் தேடாமல் - 1 கொரி. 10 : 32

நான் குருடனுக்கு கண்ணும் - யோபு 29 : 15

நான் எளியவர்களுக்குத் தகப்பனாயிருந்து - யோபு 29 : 15

நான் உங்களை நினைக்கிறபொழுதெல்லாம் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன் - பிலி. 1 : 6

நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன் -1 கொரி. 9 : 26

நாம் அவருடைய கற்பனைகளின்படி நடப்பதே அன்பு - 11 யோவா. 6

## டிசம்பர் மாத இதழின் வேத அறிவுப் போட்டியில் வெற்றிபெற்றவர்கள்

1. A. மைக்கேல்ராஜ்குமார் - திண்டுக்கல்
2. J. ஜெயஅமுதா - வத்தலக்குண்டு
3. J. மேரிஎலிசபெத் கலைவாணி - வத்தலக்குண்டு
4. S. ரேய்ச்சல் அமுதமணி - மேல் விசாரம்
5. N. தானியேல் தமிழ்வாணன் - மேல் விசாரம்
6. J. ஜாஸ்வா ஜெபராஜ் - மதுரை

## டிசம்பர் மாத இதழின் விடைகள்

1. இடுக்கண்களுக்கு - நீதி. 21 : 23
2. யாசோன் தெசலோனிக்கே - அப். 17 : 5, 9
3. கிறிஸ்துவுக்கு - I கொரி. 8 : 12
4. தூஷணமும், வம்பும் - கொலோ. 3 : 8
5. சாமுவேல் - 1 சாமு 12 : 13
6. சாத்தான்
7. சத்தியத்தையும் சமாதானத்தையும்
8. இயேசுகிறிஸ்து
9. ஆம்
10. பழக்கமில்லாதவனாயிருக்கிறான்

## இம்மாத வேத அறிவுப் போட்டி

முதல் ஐந்திற்கு வசன ஆதாரத்துடனும், கடை ஐந்திற்கு வேதத்திலிருந்து விடை மட்டும் எழுதி இம்மாதம் 25ஆம் தேதிக்குள் அனுப்பிவைக்கவும்.

1. யார் ஒரு தீங்கையும் அறியான்?
2. எவ்வளவோ துன்பங்களை சகித்தேன்; இவையெல்லாவற்றினின்றும் கர்த்தர் என்னை நீங்கலாக்கிவிட்டார் என்றது யார்?
3. தம்முடைய பரிசுத்தத்திற்கு நாம் பங்குள்ளவர்களாகும்பொருட்டு நம்முடைய பிரயோஜனத்திற்காகவே நம்மை என்ன செய்கிறார்?
4. என் நாமத்தை மறுதலியாமல், என் வசனத்தைக் கைகொண்டபடியினாலே இதோ, திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன் என்று எந்த சபையைப் பார்த்து சொல்லுகிறார்?
5. வேசித்தனங்களும், அவளுடைய பில்லி சூனியங்களும் இத்தனை ஏராளமாயிருக்கையில் சமாதானம் எது என்றவன் யார்?
6. தன் சகோதரரிடத்தில் அடிமைகளுக்கு அடிமையாயிருப்பான் என்று தன் தகப்பனால் சபிக்கப்பட்டவன் யார்?
7. அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் என்ன செய்யுங்கள்?
8. வேசித்தனம் செய்கிறவனோ எதற்கு விரோதமாய் பாவஞ்செய்கிறான்?
9. சரீரமோ வேசித்தனத்திற்கல்ல, எவருக்கே உரியது?
10. தேவனுடைய சிநேகிதனெனப்பட்டவன் யார்?

பெண்கள் பகுதி

# நான் குடும்பத்தில் ஒருவன்
# I am one of the family

இவர் என்னுடைய சகோதரர், எனக்காக மரித்தவர்
என் நேசர்
இனிமையானவர்
மிகவும் மதிப்பிற்குரிய சகோதரர்,
இன்றும் கூட
நம்மில் அவரிடம் அன்பு கூறுகிறவர்கள் எவர்களோ
அவர்களது நினைவிலிருப்பவர்,
ஒரு விண்ணப்பம்
அவருக்கு
அவர் துதிக்குப்
பாத்திரமானவர்,
நான் மகிழ்ச்சியுடன் பாடுவேன்
காத்திருப்பேன்
அவருக்குக் காணிக்கை செலுத்தும் நேரத்திற்காக.
நம்மில் சிலர்
இன்றும் இரட்டிப்பாக ஆசீர்வதிக்கப்பட்டுள்ளனர்;
நமது தனிச்சுதந்திரம்
அவருக்கு சேவை செய்வது
இந்த நினைவில்,
என்னுடைய பங்கு?

எல்லாவற்றிலும் இனிமையானவர் இவரே:
இவைகள் அனுமதிக்கின்றன என்னை
- என்னை!-
அவரது சரீரத்திற்கு மாதிரியாக வைக்கப்பட்ட விருந்தை -
ஆயத்தம்பண்ண
பின் நான் அப்பத்தைத் தயாரித்துள்ளேன்
என்னுடைய அன்பின் கரங்களால்,
பின் மின்னும் பாத்திரங்களில்
திராட்சை ரசத்தை வார்த்துள்ளேன்
இது அவரது இரத்தத்திற்கு அடையாளம்.
நான்
- நான் -
இந்த அருமையான சேவையைச் செய்தேன்
என்னுடைய சகோதரருக்காக
ஆகவே இந்த உலகம் மறக்காது
அவர் ஜீவித்தார் மறித்தார்
திரும்பவும் ஜீவிக்கிறார்
எனக்காக...
நம்மெல்லாருக்காக!

- Betty Burton Choate

**Translated by**
**Glory Arjunan**

ஜீவ அப்பம் நானே (இயேசு) யோவா. 6 : 48

# பிரசங்கிமார்களின் நடத்தை



DON L. NORWOOD

## I விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு (I தீமோ. 4 : 12-16)

### A வார்த்தையிலும்

1. அதாவது நீங்கள் பேசும் வார்த்தையில் (எபே. 4 : 29-32; கொலோ. 3 : 8-14; மத். 12 : 35-37)

### B. நடக்கையிலும்

1. முதிர் வயதுள்ள ஆண்களிடம் எவ்வாறு நடந்து கொள்வது? (I தீமோ 5:1)
2. முதிர் வயதுள்ள பெண்களிடம் எவ்வாறு நடந்துகொள்வது? (I தீமோ 5:2)
3. பாலிய (வாலிப) புருஷரிடம் எவ்வாறு நடந்துகொள்வது? (I தீமோ 5:1)
4. பாலிய (வாலிப) ஸ்திரீகளிடம் எவ்வாறு நடந்துகொள்வது? (I தீமோ 5:2)
5. ஒழுக்கப்பண்பு (I தெச. 4 : 1-8)

### C. அன்பிலும்

1. சகோதரரிடத்தில் அன்பு கூறுங்கள் (1 பேதுரு 2 : 17)
2. அன்பானது பிறனுக்கு பொல்லாங்கு செய்யாது (ரோமர். 13 : 10)
3. அன்பு இப்படி நடக்க வைக்கிறது (I கொரி 13 : 1-8)

### D. ஆவியிலும்

1. நாம் ஆவியில் அனலாயிருக்க வேண்டும் (ரோமர். 12 : 1; கொலோ. 3:23-24)
2. அனலுள்ள உற்சாகத்துடன் இருக்க வேண்டும். அதை தினசரி ஊழியத்தில் காண்பிக்க வேண்டும். (1. கொரி. 15:58).

### E. விசுவாசத்திலும்

1. தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படிவதில் உங்கள் விசுவாசத்தை காண்பிக்க வேண்டும். (ரோமர். 1 : 5; 16 : 25-26)
2. பிரசிங்கிக்கிறபடியே நீங்களும் நடக்க வேண்டும் (1 தீமோ. 4 : 16)

### F. கற்பிலும்

1. யாருக்கும் இடறல் உண்டாக்கும்படியாக நீங்கள் எதையும் செய்யக்கூடாது (1 கொரி. 10 : 31-32; 1 தெச. 5 : 22; 1 கொரி. 11 : 1)
2. ஆண், பெண் சம்பந்தப்பட்ட உறவு முறையில் சுத்தவானாக இரு (எபே. 5 : 3)

## II ஜாக்கிரதையாயிரு (1 தீமோ. 4 : 13)

A. வாசிக்கிறதிலும் (2 தீமோ. 2 : 15; எபே. 5 : 15-17)

B. புத்தி சொல்லுகிறதிலும் - உறுதியுடன் போதி, உற்சாகப்படுத்து.

C. உபதேசிக்கிறதிலும் (2 தீமோ. 4 :1-5)

**Translated by P. R. SWAMY**



# நான் யார் Who Am I ?

1. நான் தேவ ஆவியினால் ஏவப்பட்டு வேதாகமத்தின் ஒரு புத்தகத்தைஎழுதினவன் என்று காலங்காலமாகப் பேசப்பட்டு வருகிறது.
2. எருசலேமிலுள்ள என் தாயாரின் வீடு சபை கூடி வரும் இடமாக இருக்கிறது.
3. என் தாயாரின் பெயர் மரியாள்.
4. சீப்புரு தீவிலிருந்து வந்த என் உறவினன் பெயர் பர்னபா.
5. நான் மிஷனரி ஊழியனாகும்படி விரும்பினேன்.
6. எருசலேமிலிருந்து நானும் பவுலும் என்னுடைய உறவினனோடு அந்தியோகியாவுக்குப் பயணமானோம்.
7. ஒருவரோடொருவர் சேர்ந்து பயணம் மேற்கொண்ட சில நாட்களுக்குப்பின் நான் திரும்பவும் எருசலேமுக்குத் திரும்பினேன்.
8. பவுலும் பர்னபாவும் இரண்டாம் விசை பயணம் செய்யத் திட்டமிட்ட போது, பர்னபா தங்களோடு என்னையும் சேர்த்துக் கொள்ள விரும்பினான், ஆனால் பவுல் மறுத்துவிட்டான்; ஆகவே பர்னபாபவுலை விட்டுப் பிரிந்தான். அதன் பின் அவனும்நானும் சேர்ந்துசீப்புருத்தீவுக்குப் பயணமாகி அங்கு மக்களுக்கு உபதேசம் பண்ணினோம்.
9. அதன் பிறகு பவுலும் நானும் ஒப்புரவாகினோம். ஏனென்றால் "ஊழியத்தில் அவன் எனக்குப் பிரயோஜனமுள்ளவன்" என்றுபவுல் தீமோத்தேயுவிடம் என்னையும் தன்னிடம் அழைத்து வரும்படி கூறினான்.
10. என் முதல் பெயர் யோவான். கெத்சமனே தோட்டத்தில் இயேசுவைபிடித்த போது, அவரை விட்டு ஓடிப்போன வாலிபன் நான் எனக் கருதப்படுகிறவன்.

Selected From
The Voice of Truth International
Vol. 15.

இவன் யார்?
விடை அடுத்த இதழில் எதிர்பாருங்கள்.

நீதிமான்களோடே அவருடைய இரகசியம் இருக்கிறது. நீதி. 3 : 32.

MONTHLY MAGAZINE
Regd. No. 84661 - 92
Postal Regn. No. TN/DDL/19.

Edited by B. Arjunan on behalf of Church of Christ 2.2.102-D/5, Rajan Nagar, Batlagundu and Printed at Bharathi Computer Offset Press for Shanthi Printers Main Road, Batlagundu - 624202.

எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க அன்புடன் அழைக்கின்றோம்.

ஞாயிறு காலை 9-00 மணி
வியாழன் மாலை 6-45 மணி



கிறிஸ்துவின் சபை,
2.2.102-D/5, ராஜன் நகர்,
வத்தலக்குண்டு-624 202.
திண்டுக்கல் மாவட்டம்.
Phone (04543) 23278.

To

From
WORD OF CHRIST,
Post Box No. 5,
BATLAGUNDU - 624 202.
S. India.